PW2 சேகர் த/பெ. சேதுராமன்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

எதிரியின் மாமனாரான 1வது சாட்சி கண்ணப்பன் எனக்கும் மாமனார் என்றால் சரிதான். எனது மனைவியின் அம்மாவும், எதிரியின் மனைவி ராதிகாவும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். 08.05.2015ம் தேதி என்னுடைய மாமனார் கண்ணப்பன் எதிரியின் மனைவியிடம் வாடகை வாங்க வந்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி கண்ணப்பனை பார்த்து எதற்கு வாடகை வாங்க வந்தாய் ஒழுங்காக சென்று விடு இல்லை என்றால் கொன்றுவிடுவேன் என்று சொன்னது பொய் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி கண்ணப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் சேகரம், மணலூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அதேபோல் எனது மாமனார் மிகப்பெரிய செல்வந்தர் என்றால் ஆம். அதேபோல் எனது மனைவியின் மூத்த சகோதரி ராதா என்பவரை மேலூர் நாவினிப்பட்டியை சேர்ந்த நவநீதன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) எனது மாமானருக்கும், மேற்கூறிய ராதாவிற்கும் சிவகங்கை மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் OS No. 56/2007 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆம். மேற்கூறிய வழக்கின் ராதா என்பவரின் சொத்துக்களை மோசடி செய்ய வேண்டும் என்ற தீய எண்ணத்தில், உண்மைக்குபுறம்பான மோசடியான ஆவணங்களை எனது தலைமையில் எனது மனைவி ரமா, எனது மாமனார் கண்ணப்பன் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண்

118/2016 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல, வழக்கு உள்ளது அது பொய்யான குற்றசாட்டு. மேற்கூறிய விவரங்களை இல்லை என்று தெரிந்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் 10.02.2015 ம் தேதி நான், கண்ணப்பன், அவரது மனைவி சகுந்தலா, எனது மனைவி ரமா மற்றும் சிலர் மோசடியான ஆவணங்களை தயார் செய்து, எதிரி குடியிருந்த வீட்டை விட்டு வெளியேறும்படியும், ஒன்றும் எழுதாத வெற்று பத்திரத்தில் எதிரி கையொப்பம் செய்யும்படியும், அவரை தாக்கி காயம்படுத்தியதாக 10.08.2015 ம் தேதி எங்கள் மீது ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அந்த வழக்கு குற்ற எண் 417/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது பொய் வழக்கு.

3) கண்ணப்பன் இவ்வழக்கிற்கு புகார் கொடுக்க சென்றபோது நானும், உடன் சென்றேனா என்றால் சரிதான், நான், பிரான்மலை ராஜராஜன் ஆகியோர்கள் புகார் கொடுக்க சென்றோம். அந்த புகார் மனுவில் நானும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை என்று சொல்லிவிட்டு சாட்சி பின்னர் ஆம் என்று கூறுகிறார். எதிரியின் மனைவி ராதிகா பாண்டியன் சரஸ்வதி யாதவா கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். அதேபோல் அவர் புற்றுநோயால் கடந்த 05.05.2014 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதேபோல் இந்த புகாரின் அடிப்படையில் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் என்னையும், எதிரி தரப்பினர்களையும் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த புகார் உரிமையியல் தன்மை உடையது என்பதால் எங்களது புகாரை ஏற்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

4) எதிரியின் வீடு ஒத்தக்கடை, ஆய்சா கார்டனில் உள்ளது என்றால்

சரிதான். நான் நடத்தி வரும் டெய்லரிங் கடையின் பெயர் என்ன என்றால் Style fit. எனது கடையில் எதிரியானவர் எனக்கு உதவியாக எத்தனை வருடம் பணிபுரிந்தார் என்றால் சுமார் 10 வருடம். எனது கடையில் எதிரி வேலை செய்து லட்சகணக்கான வருமானங்கள் ஈட்டி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி நான் கொடுக்க மாத வருமானம் போதவில்லை என்பதால் அவர் M Tex என்ற கடை நடத்தி வருகிறார் என்றால் ஆம். கண்ணப்பனின் சொத்துக்கள் எதிரிக்கு வரக்கூடாது என்பதற்காக அவர் மீது பொய்யாக பல புகார்கள் காவல் நிலையத்தில் கொடுத்து அவரை பயமுறுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

5) நான் ஒத்தக்கடையில் எங்கு குடியிருந்து வந்தேன் என்றால் நான் ஒத்தக்கடை திருமோகூர் ரோட்டில் பிச்சை தேவி அவன்யுவில் குடியிருக்கிறேன். வழக்கு சம்பவம் நடத்ததாக சொல்லப்படும் தேதியில் எங்கள் வீட்டில் இருந்து பார்த்தால் ஆய்ஸா கார்டன் தெரியுமா என்றால் தெரியாது. இதுபோன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எனது மாமனாரும், நானும் அரசியல் செல்வாக்கு, பணபலம், படைபலம் ஆகியவற்றை தவறாக பயன்படுத்தி எதிரி மீது பொய் புகார் கொடுத்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.